*Available online at:* [http://www.advancedscientificjournal.com](http://www.advancedscientificjournal.com)
[http://www.krishmapublication.com](http://www.krishmapublication.com)
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 419- 422, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

# INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

## வேள்விக்குடி செப்பேடுகள் பற்றி ஓர் வரலாற்று ஆய்வு

*முனைவர்.இரா.நதியா*
*உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர் -1*
*Email Id: nathiyaramalingam1855@gmail.com*

***ஆய்வின் சுருக்கம்:***

*இயற்கையாக ஓலைச்சுவடிகள் அழிவது போலச் செப்பேடுகள் அழிவது இல்லை. எனவே பண்டைய மக்கள் செப்பேடுகளைப் படிக்கவும் பாதுகாக்கவும் பூமியில் புதைத்து வைத்தனர். மேலும் பல செப்பேடுகள் உருக்கப்பட்டுப் பாத்திரங்களாக மாறின. செம்பின் உபயோகத்துக்காக பல செப்பேடுகள் அழிக்கப்பெற்றன.*

***சிறப்புச் சொற்கள்:*** *செப்பேடுகள், பல்யாக முதுகுடுமி பெருவழுதி, கொல்யானை, நற்சிங்கம்*

### முன்னுரை

*செப்பேடுகள் என்பவை பழங்காலத்தில் மன்னர்களின் கோவில் தானங்கள் வம்சாவழி (பரம்பரை) போர்க்குறிப்புகள், மரபு வழிக்கதைகள் போன்ற நிகழ்வுகளைப் பதிந்து வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகத்தகடு ஆகும். இவை தற்காலத்தில் பழங்காலத்தைப் பற்றி அறியும் தொல்லியல் சான்றுகளாக இருந்து வருகின்றன. இவற்றில் சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கம் 280 செப்பேடுகளை படியெடுக்க – முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.*

*செப்பேடுகள் அவை கிடைத்த இடத்தைக் கொண்டோ அவை இருக்கும் இடத்தைக் கொண்டோ பெயரிடப்படுகின்றன. செப்பேடுகளை அவை கிடைக்கும் இடத்தை மட்டும் வைத்து அவ்விடத்திற்கே உரியது என்று கூறுமுடியாது. ஏனெனில் செப்பேடுகளை எடுத்துச் செல்வது எளிமையாக இருப்பதன் காரணமாக ஓரிடத்திற்குரியவை வேறுப்பட்ட தொலைவான இடங்களில் கூடக் கிடைக்கின்றன.*

### வேள்விக்குடி செப்பேடுகள் *(Velvikkudi Copper Plates)*

*சங்ககாலப் பாண்டியர் வரலாற்றையும் இடைக்காலப் பாண்டியர் வரலாற்றையும் அறிய உதவும் சான்றுகளுள் வேள்விக்குடி செப்பேடுகள்! மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும். வேள்விக்குடி சாசனம் பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்சடயனின் மூன்றாவது ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 768-ல் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த செப்பேடுகள் தமிழ். சமஸ்கிருதம் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. தமிழ்ப்பகுதி வட்டெழுத்திலும் சமஸ்கிருதப்பகுதி கிரந்த எழுத்திலும் எழுதப் பட்டுள்ளன. இவையாவும் செய்யுள் நடையிலேயே அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது ஆகும். இந்த வேள்விக்குடி செப்பேடுகள் அக்காலத்து வரலாற்றுச் செய்திகள், சமுதாயநிலை, சமயநிலை ஆகியவற்றை அறிந்து கொள்ள பெரிதும் துணை புரிகின்றன.*

### வேள்விக்குடி செப்பேடுகள் வெளியிடப்படுதல் :

*வேள்விக்குடி சாசனம் பத்து ஏடுகளைக் கொண்டது. இதன் மூலப் பிரதி லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அது எப்போது எவ்விதம் அங்கு சென்றது என்ற விவரம்*

ஏதும்தெரிய வில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சர்.வால்டர் எலியட் திரட்டிய மூலச் சான்றுகளில் இதுவும் ஒன்று ஆகும். வேள்விக்குடி சாசனத்தின் இரண்டு படிகளை *(Estampage)* டாக்டர் பிளீட் *1893*-ல் இந்திய சாசன இலாகாவுக்கு அனுப்பிவைத்தார். ஆனால் அப்போது இந்த சாசனமும் அதன் விபரங்களும் வெளியாகவில்லை. *1908*-ல் தான் திரு. வெங்கையா தனது ஆண்டு அறிக்கையில் *(Epigraphical Report 1908/ Part II, Page 63)* இந்த சாசனத்தை விரிவாக ஆய்வு செய்து வெளியிட்டார்.

இந்த சாசனத்தில் காணப்படும் வேள்விக்குடி என்ற ஊர் மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே இருந்ததாகக் கருதப்படுகிறது. தற்போது இந்த ஊர் இல்லை. பிரிட்டிஷ் மியூசியம் அதிகாரிகளுக்கு இந்தசாசனம் எப்படிக் கிடைத்தது என்ற விபரம் தெரியவில்லை. எனவேதான் இதன் படிகளை இந்திய பேராசிரியர் ஜே. தர்மராஜ். சாசன இலாகாவிற்கு அனுப்பிவைத்தார்கள். அதற்குப்பிறகு இந்த சாசனம் *1923*- ம் வருடத்து எபிகிராபியா இந்திகா *17*-ம் தொகுதியில் *291-309*-ம் பக்கங்களில் கிருஷ்ணசாஸ்திரியால் வெளியிடப்பட்டது. திருவாங்கூர் சமஸ்தானத்தில் புதை பொருள் ஆராய்ச்சித் துறையில் இருந்தது அ. கோபிநாத ராயருக்கும் இந்த சாசனத்தின் ஒரு பிரதி கிடைத்தது. அதை திரு.கே.ஜி. சங்கன் என்பவர் வாசித்து 'செந்தமிழ்' என்பதின் *20*-ம் தொகுதியில் *205-216*-ம் பக்கங்களில் வெளியிட்டார்.

**வேள்விக்குடி சாசனத்தின் அமைப்பு :**

பத்து ஏடுகளைக் கொண்ட இந்தசாசனத்தில் முதல் ஏடும் கடைசி ஏடும் உட்புறம் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. மற்ற எட்டு ஏடுகளும் இருபுறமும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு பொறிக்கப்பட்டுள்ள இந்த சாசனம் மொத்தம் *155* பக்கங்களில் வரிகளைக் கொண்டுள்ளது. முதல் ஏழு ஏடுகள் பின்புறத்திலே இடது பக்கத்து விளிம்பில் வரிசையாக ஒன்று முதல் ஏழுவரை முறையே எண்கள் இடப்பட்டுள்ளன. பின் மூன்று ஏடுகளில் எண் எதுவும் காணப் படவில்லை. இந்த ஏடுகள் மற்ற சாசன ஏடுகளைப் போல இடது புறத்தில் துளையிடப்படாமல் தலைப்பில் இடது புறமாகத் துளையிடப் பட்டுள்ளன. இதனால் இந்த செப்பேடுகளை ஓலைச்சுவடிகளைப் போல மேலும் கீழுமாகப் புரட்டிப் பார்க்க வேண்டி வரும்.

இந்த சாசனத்தின் சமஸ்கிருதப் பகுதி கிரந்த எழுத்திலும் தமிழ்ப் பகுதி வட்டெழுத்திலும் உள்ளன. தமிழ்பகுதியில் மெய்யெழுத்துக்கள் பெரும்பாலும் புள்ளியிடப்பட்டுள்ளன. சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இருபகுதிகளும் செய்யுள் நடையிலேயே அமைந்துள்ளன.
(உ-ம்) "பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியென்னும் பரமேச்வரனால் வேள்விக்குடி யென்னபட்ட கேள்வியிற்றரப்பட்டதனைத் துளக்கமில்லாக் கடற்றாணையாய் களப்பிரா லிறக்கப்பட்டது என்று நின்றவன் விக்ஞாரியஞ் செய்ய நன்று நன்றென்று மறுவலத்து நாட்டானின் பழமையாதல் காட்டி நீ கொள்க வென்ன" என்று மிக அழகான செய்யுள் நடையில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதுவதற்கு தமிழில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே முடியும்.

**வேள்விக்குடி செப்பேட்டின் சமஸ்கிருதப்பகுதியில் பாண்டியர் வரலாறு :**

சிவபெருமானுக்கு வணக்கம் கூறி மங்கலத்துடன் ஆரம்பிக்கிறது. சமஸ்கிருதப்பகுதி. முதல் இரண்டு சுலோகங்கள் பாண்டிய வம்சத்தின் புகழ்பாடுகின்றன. இந்த வம்சத்தினர் பூ பாரத்தைத் தாங்குவதால் ஆதிசேசனுக்கு ஓய்வு ஏற்படுகிறது என்றும், இந்த வம்சம் அசத்திய முனிவரை புரோகிதராகக் கொண்டது என்றும் கூறுகிறது சுலோகம், பிரளய காலத்திலும் பாண்டியவம்சம் அழிவதில்லை. இதன்பிறகு பாண்டிய வம்சத்தின் பழைய அரசர்கள் நிகழ்த்திய சாதனைகள் கூறப்பட்டுள்ளது.

மேருவின் உச்சியில் இரு மீன்களைப் பொறித்தது. இந்திரனுடைய சிம்மாசனத்தில் ஒரு பாதியையும். அவனுடைய மாலையையும் அடைந்தது, உலக மக்களுக்குப் புகலிடமான தேவர்களைத் தூதர்களாகக் கொண்டது. அகத்தியரால் முடிசூடப்பட்டது. குடிமக்கள் அனைவரும் விரும்பியதைக் கொடுத்தது போன்ற புகழ்பெற்ற இத்தகைய வம்சத்தில் மூவுலகம் போற்றும் மாறவர்மன் தோன்றினான். இவன் போரில் பல எதிரிகளை வென்றான். துலாபாரம் நடத்தி அந்த பொன்னை அறிஞர் பலருக்கும் வழங்கினான். இவனது மகன் ரணதீரன் இளஞ்சூரியனோடு ஒப்பிடப்பட்டிருக்கிறான். ரணதீரன் மகன் ராஜசிம்மனிடம் போரில் பல்லவமன்னன் தோற்று அஞ்சி ஓடினான். ராஜசிம்மனின் மகனே இந்த சாசனத்தை வழங்கிய ஜடிலவர்மன் ஆவான். இவனுக்கு பாரந்தகள் என்று பெயரும் உண்டு. இவ்வாறு சமஸ்கிருதப் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

**வேள்விக்குடி செப்பேட்டின் தமிழ்ப்பகுதியில் காணப்படும் பாண்டியர் வரலாறு**

வேள்விக்குடி செப்பேட்டின் தமிழ்ப்பகுதி தனிச்சிறப்பு வாய்ந்தது. ஆரம்பத்தில் மங்கலச் சொல் ஏதும் இல்லை. 'கொல்யானை என்றே ஆரம்பிக்கிறது. பின்னர் கீழ்க்கண்டவாறு வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது.

**பல்யாக முதுகுடுமி பெருவழுதி :**

வேள்விக்குடி கிராமம் கொற்கை கிழான் நற்கொற்றன் என்ற நற்கொற்றனைத் அந்தணருக்கு சங்ககால பாண்டிய மன்னன் பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியினால் தாளமாக வழங்கப்பட்டது.

தலைவனாகக் கொண்ட வேதியர்கள் உதவியுடன் அரசனேயாகத்தை நடத்தி, அந்தயாக தட்ஷணையாக வேள்விக்குடியைத் தானம் செய்தான். தானம்பெற்ற ஊரை நற்கொற்றன் வழிவந்தோர். நீண்டகாலம் அனுபவித்து வந்தனர். பின்னர் களப்பிரர் ஆட்சிக்காலத்தில் இந்ததானம் பறிக்கப்பட்டது.

**கடுங்கோன்**

பின்னர் வந்த பாண்டிய மன்னன் கடுங்கோன் களப்பிரர் ஆட்சியை ஒழித்துக்கட்டி பாண்டிய குல ஆட்சியை மீண்டும் நிலை நிறுத்தினான். இந்த கடுங்கோன 'மானம் பேர்த்த தானை வேந்தன்' என்று புகழ்பட்டிருக்கிறான். இவ்வாறு பாண்டியர் ஆட்சியைக் கைப்பற்றிய களப்பிரரை வென்று மீண்டும் பாண்டிய ஆட்சியை நிறுவியவன் கடுங்கோன் என்று இச்சானம் தெளிவாகக் கூறுகிறது. கடுங்கோனுக்கு பிறகு ஆட்சி புரிந்த ஆறு பாண்டிய மன்னர்களைப் பற்றி வேள்விக்குடி சாசனம் விரிவாகக் கூறுகிறது.

**மாறவர்மன் மற்றும் சேந்தன்**

கடுங்கோனுக்குப்பிறகு அவனது மகன் அவணி சூளாமணி என்ற பெயர் கொண்ட மாறவர்மன் அரியணை ஏறினான். இவன் மலர் மகளை திருமணம் செய்து கொண்டான். எதிரிகளையெல்லாம் அழித்தான். இவனுக்குப் பிறகு சேந்தன் என்பவன் அரியணை ஏறினான். சேந்தனுக்கு செழியன், வானவன் போன்ற சிறப்பு பெயர்கள் காணப்படுகின்றன.

**அரிகேசரி வர்மன்**

சேந்தனுக்குப்பிறகு அவனது மகன் அரிகேசரிவர்மன் அரியணை ஏறினான். அரிகேசரி வர்மன் பாழிப்போர். ஆகியவற்றில் வெற்றிகண்டான். பரவர் மற்றும் நெய்வேலிப்போர் வென்றான். அடுத்தபடியாக செந்நிலத்துப் போரிலும் வென்றான். பின்னர் குருநாட்டவரை வேள்விக்குடி செப்பேடுகள் சோளனை வென்று புலியூரைக் கைப்பற்றினான். இவன் ஹிரண்டி கர்ப்பம். துலாபாரம் போன்ற மகாதானங்களை நடத்தி அந்தப் பொன்னை அந்தணர்களுக்கும் அசக்தர்களுக்கும் வாரி வழங்கினான் என்று இந்த சாசனம் கூறுகிறது.

**சடையன்**

பின்னர் அரிகேசரிவர்மனின் இவர் மகள் சடையன் அரியனை மருதூரில் நடந்த போரில் வெற்றியடைந்து ஏறினான் ஆய்வேளைக் கைப்பற்றினான் பின்னர் செங்கொடி, புதான்கோடு ஆகிய- இரண்டு இடங்களிலும் வெற்றியடைந்தான். இந்த மன்னன் கொங்கர் கோள் என்றும், மதுரகருநாடகன் என்றும் சாசனத்தில் வர்ணிக்கப் பட்டிருக்கிறான். மேலும் தென்னவானவன், செம்பியர் சோழன் என்றும் புகழப்பட்டுள்ளான். இந்த விருதுகள் எல்லாம் சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றையும் ஒரு குடையின் கீழ் இவன் ஆட்சி புரிந்தான் என்று உணர்த்துகின்றன.

**மாறன்**

சடையனுக்குப்பிறகு அவளது மகன் மாறன் அரியணை ஏறினான். இவனது வெற்றிகள் சாசனத்தில் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. இவன் கையில் வேலேந்தி மிகவும் வேகத்தோடு வந்து எதிர்த்தவர்களை நெடுவயல் என்ற இடத்தில் அழித்தான். அதேபோல் குறுமடை மன்னிக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பனூர் ஆகிய இடங்களில் வெற்றி கொண்டு யானை, குதிரை பலவற்றைக் கைப்பற்றினான். குழும்பூர் என்ற இடத்தில் பல்லவனைத் தோற்கடித்தான். இவன் காவிரியைத் கங்கராஜனுடன் தாண்டி மழகொங்கத்தை அடிமைப் படுத்தினான். ஒப்பந்தம் செய்து கொண்டான். பசுபதியான சிவபெருமானை வணங்கினான், கோசஹஸ்ரம், ஹிரண்ய கர்ப்பம். துலாபாரம் போன்ற மகா தானங்களைப் பலமுறை செய்து அந்தப்பொருட்களை வேதம் வல்லார்க்கு வழங்கினான்.

**பராந்தக நெடுஞ்சடையன்**

மாறனுக்குப் பிறகு அவனது மகன் நெடுஞ்சடையன் அரசனானான் அவனே இச்சாசனத்தை வழங்கிய பராந்தகள் ஆவான். இவன் பெண்ணாகடம் என்ற ஊரில் காடவனைத் (பல்லவனைத்)தோற்கடித்தான். வெற்றிகண்டான்.

வேள்விக்குடி சாசனம் பராந்தக நெடுஞ்சடையனின் மூன்றாம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 770) வழங்கப்பட்டது. இவனது ஆட்சியில் ஒருநாள் வேள்விக்குடியைத் தானம் பெற்ற கொற்கை கிழானின் வழிவந்த நற்சிங்கன் என்பவன் மதுரை மாநகரில் மனம் கொதித்து கூச்சல் இட்டான். அதைக் கேட்ட அரசன் அவனை அழைத்து விசாரித் தான், விவரத்தை அறிந்த மன்னன் அவன் கூறியதை ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டுமாறு கட்டளையிட்டான். நற்சிங்கன் தன்னிடமிருந்த ஆதாரங்களை எடுத்துக் காட்டினான். உடனே பராந்தகன் தன் முன்னோரால் வழங்கப்பட்டதை தானும் வழங்குவதாக அப்போதே உத்தரவிட்டான்.

இந்த நற்சிங்கன் மீண்டும் தானம் பெற்ற அந்த ஊர் முழுவதையும் தனக்கே வைத்துக் கொள்ளாமல் மூன்றில் இரண்டு பகுதியை அந்தணர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தான். சாசனத்தில் தானம் கொடுக்கப்பட்ட ஊரின் நான்கு எல்லைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இந்த தானத்தை நிறைவேற்றுவதற்கு கரந்தபுரத்து வாசியான மூவேந்த மங்கல பேரரையன் என்பான் நியமிக்கப்பட்ட செய்தியும் சாசனத்தில் காணப்படுகிறது.

இப்பிரசஸ்திபாடினவன் சேனாதிபதி ஏனாதி ஆயின சாத்தஞ்சாத்தன் ஆவான் என்று சாசனம் கூறுகிறது. இந்த வேள்விக்குடி சாசனத்தை செப்பேட்டில் பொறித்தவன் சுத்தகேசரிப் பெரும் பண்ணைக்காரன் என்று கூறி சாசனம் முடிவு பெறுகிறது.

## முடிவுரை

இச்செப்பேட்டின் தமிழ்ப்பகுதி மற்ற செப்பேடுகளைப் போல் ஆரம்பத்தில் மங்கலச் சொல் ஏதும் இல்லாமல் கொல் யானை" என்றே ஆரம்பிக்கிறது. கடவுள் வணக்கமோ பாண்டிய வம்சத்தின் புகழோ ஏதும் தனியாகத் தமிழில் குறிக்கப்படவில்லை. தானம் வழங்கப் பெற்ற கிராமத்தின் பழைய வரலாற்றுடனே செப்பேட்டுப் பகுதி ஆரம்பிக்கிறது. வேள்விக்குடி என்ற ஊர் சங்க காலத்தில் பொ.ஆ.மு.300 கொற்கைக் கிழான் நற்கொற்றன் என்ற அந்தணர்க்குப் பல்யாக முது குடுமி பெருவழுதி என்ற பாண்டிய மன்னரால் வழங்கப்பட்டுள்ளது.

## *அடிக்குறிப்புகள்*


1. *சா.கிருஷ்ணமூர்த்தி,தமிழ்நாட்டுச்செப்பேடுகள், மெய்யப்பன் பதிப்பகம்.*
2. *டாக்டர்.மு.ராஜேந்திரன், பாண்டியர் காலச் செப்பேடுகள், அகநி வெளியீடு.*
3. *புலவர் செ.இராசு, செப்பேடு சொல்லும் செய்திகள், ஆதிவனம் பதிப்பகம்.*
4. *சேர,சோழ பாண்டிய பல்லவர் கால கல்வெட்டுகளும் செப்பேடுகளும், எஸ்.கிருஷ்ணன், சுவாசம் பப்ளிகேஷன்ஸ்*
5. *தமிழில்.வானதி.வரலாற்றில் வழிகாட்டிய செப்பேடுகள்.*
6. *எஸ்.கிருஷ்ணன்.பாண்டியர் வரலாறு.*
7. *எஸ்.எம்.கமால்.சேதுபதி மன்னன் செப்பேடுகள்.*
8. *டாக்டர். செ.இராசு, தொண்டைமான் செப்பேடுகள், தமிழ் பல்கலைக்கழகம் வெளியீடு.*
9. *பாண்டியர் செப்பேடுகள் பத்து , உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.*
10. *நா.உதயகுமார். பாண்டிய நாட்டில் புதிய கண்டுபிடிப்புகள்.*


*****